[9th March 1966

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அப்படி ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டதாக இல்லை. 1963-64-ல் பதினாறு லட்சத்து எழுபத்தோராயிரத்து நானூற்றுப் பதினொன்று ரூபாய்க்கு மூங்கில் காண்ட்ராக்ட் மூலமாக விற்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : காட்டிலாகாவில் மூங்கில் காண்ட்ராக்ட் விடும்போது—அவர் குறிப்பிட்ட ஆலைக்குக் கொடுக்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டோடு குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்வதினால் மார்க்கெட் விலையோடு ஒப்பிடும்போது மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால் நஷ்டம் ஏற்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : மொத்தத்தில் கூப்பாக ஏலம் விடுகிறோம். அவற்றில் இவ்வளவு பேப்பர் மில்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். வெட்டுக்கூலி, ஏற்றி இறக்குகின்ற கூலி எல்லாவற்றையும் பார்த்துத் தான் விடுகிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள் எந்த ஒரு ஜில்லாவில் இருந்துதான் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கட்டுப்பாடு இருக்கிறதா? எல்லா ஜில்லாக்களில் இருந்தும் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறதா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : குறிப்பாக நீலகிரி, கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் சென்ட்ரல், சேலம் டிவிஷன், தர்மபுரி டிவிஷன், வேலூர் கிழக்கு, வேலூர் மேற்கு ஆகிய எட்டு இடங்களில் இருந்து வெட்டிக்கொள்ள கொடுக்கப்பட்டிருக்கிறது.

Fishing harbour at Colachel

* 221 *Q.*—SRI A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) the amount sanctioned for the construction of the fishing harbour at Colachel in Kanyakumari district; and

(*b*) whether there is any proposal to construct a dockyard for fishing boats and pier in that port?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) கொளச்சலில் மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கான திட்டத்தின் தொடக்க ஆய்வுக்கெனக் கீழ்க்கண்ட செலவுத் தொகையை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

1. மாதிரி ஆய்வுகள் நடத்துவதற்காக ஏற்ற வற்ற நிலைகள், அலைகளின் இயல்புகள் முதலியன பற்றிய தொடக்க ஆய்வு பரிசீலனை, புள்ளிவிவரங்கள் சேகரித்தல் ஆகியவற்றிற்கு. ரூ. 9,600

9th March 1966]

2. மேற் சொன்ன பகுதியின் நீர்ப்பரப்பு ஆய்வு இதை இந்திய அரசு மேற்கொண்டுள்ளது.	54,800
3. கொளச்சல் மீன்பிடி துறைமுகத்திட்டத்திற்காக அதற்கு வேண்டப்படும் மாதிரி ஆய்வுகளை நடத்துவதற்கு.	7,100
4. போரிங் வேலைகளுக்காக (Boring operations)	75,000
	1,46,500

(இ) மீன்பிடி துறைமுகத்தின் பகுதியாகக் கப்பல்துறை ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு எதுவுமில்லை. எனினும், கொளச்சலில் சிறு துறைமுகத் திட்டத்தின் ஒரு பகுதியாக அங்கே கடற்பாலம் ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு துறைமுகத் துறையினரிடம் உள்ளது. இது மாதிரி ஆய்வு நடத்தப்படும் நிலையில் உள்ளது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: நமது மாநிலத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் எந்த எந்த ஊர்களில் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என்று அறியலாமா?

கனம் திரு. கோ. பூவராகன்: நமது மாநிலத்தில் எண்ணூர், பேமனப்பாடு, குலசேகரப்பட்டினம், பே, புன்னக்காயல் முதலிய இடங்களில் பரிசிலனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: நமது சர்க்கார் ஓரிடத்தில் மீன் பிடிக்க உத்தரவு போடுகிறார்கள், இன்னொரு இடத்தில் மீன் பிடிக்கக் கூடாது என்று உத்தரவு போடுகிறார்கள், இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன்: மூலக்கேள்வி மீன்பிடித் துறைமுகங்களைப் பற்றியது. இதற்குத் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

நகராட்சியின் கடிதப்போக்குவரத்துக்கள்

* 222 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலுள்ள நகராட்சிகள் நடத்தும் கடிதப் போக்குவரத்துக்கள் அனைத்தும் தமிழிலேயே இருக்கவேண்டும் என அரசாங்கம் ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், இவ்வுத்தரவு எப்போது அமுலுக்கு வரும்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) நகராட்சி மன்றங்கள் அனுப்பும் கடிதங்கள் அனைத்திலும் தமிழைப் பயன்படுத்தப் பொருத்தமான துணை விதிகளை வகுத்துக் கொள்ளலாமென அவைகட்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சிமன்றங்களிலிருந்து வரும் எந்தெந்தக் கடிதங்கள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டுமென்பதும் மசோதாத் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.